
# கல்வெட்டு

திருவள்ளுவராண்டு 2026 (யுவ ஆண்டு) மார்கழித் திங்கள்



திருமகள்? மற்றும் மூத்தோளுடன் கணபதி,
புடைப்புச் சிற்பம், கி.பி. 6-ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலம்,
வேலஞ்சேரி, செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம்

காலாண்டிதழ் - 45 (1996, சனவரித் திங்கள்) விலை ரூ. 1-5
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

_ள்ளே . . . . . .

பக்கம்

1. கருவூர் வாங்கல் கிராம காகித ஆவணம்
—இரா. ஜெயராமன் ... 1

2. தமிழகமும் கணபதி வழிபாடும்
—நடன. காசிநாதன் ... 24

3. அரியலூர் மழவராயர்கள்
—ஆர். ராமசேஷன் ... 33

# கருவூர் வாங்கல் கிராமக் காகித ஆவணம்


## இரா. ஜெயராமன்

இளநிலைக் கல்வெட்டாய்வாளர்


திருச்சி மாவட்டம், கருவூர் வட்டம் வாங்கல் என்னும் கிராமத்தில் திரு. சுந்தரம் என்பவரிடத்தில் 195 ஆண்டுகளுக்கு முன் காகிதத்தில் எழுதப்பட்ட கையெழுத்துப் பிரதி ஒன்று உள்ளது.[1] 2.20 மீ. நீளமும் 22 செ.மீ. அகலமும் உடைய இக்காகித ஆவணம் தனித்தனித் தாள்கள் ஒன்றன்கீழ் ஒன்றாக ஒட்டப் பட்டுள்ளன. இரண்டு தாள்களும் சேர்த்து ஒட்டியிருக்கும் இடத்தில் எழுத்துடன் கூடிய இலச்சினை (முத்திரை) குத்தப் பட்டுள்ளது. இஃது இந்த ஆவணத்தின் இடையில் வேறு தாள்கள் இடைச் செருகலாகப் புகுத்த இயலாது என்ற காரணமாகும். மேலும் ஆவணத்தின் தொடக்கத்தில் மையப்பகுதியில் அரசு இலச்சினை ஒன்றும் வட்ட வடிவில் பொறிக்கப்பட்டுள்ளது. வட்ட வடிவின் ஓரத்தில்

1. ...... வாங்கல் முதலான......வொ . நொயிலாத்துக்கு தெற்குக......
2. கூற்ற சாம சொமியா ஆறமுகம கி வியங்கிச்சு எப்ப......

என்று தமிழ் மொழியில் இரண்டு வரிகள் எழுதப்பட்டுள்ளன. வட்டத்தின் நடுப்பகுதியில் சதுர வடிவில் தமிழ் வாசகத்தின் மொழிபெயர்ப்பு மராட்டி-மோடி எழுத்தில் ஆறுவரிகளில் எழுதப் பட்டுள்ளது. எழுத்துக்கள் பூச்சி அரித்திருப்பதால் முழுமையாகப் படிக்க இயலவில்லை. எனினும் வாங்கல் இரவீசுவரசுவாமி கோயிலுக்குரியது என்பது மட்டும் தெளிவாக உள்ளது.

இக்காகித ஆவணம் இரண்டு மொழிகளில் எழுதப்பட்டுள்ளது. முதற்பகுதி மராட்டி-மோடி எழுத்திலும், அதன் தமிழாக்கம் தொடர்ந்து கீழே தமிழ் மொழியிலும் எழுதப்பட்டுள்ளது.

---

1. கருவூர் இல. பரணன் அவர்களின் உதவியுடன் மேற்படி நபரிடமுள்ள 'காகித ஆவணம்' ஆய்வு செய்யப்பட்டு நகல் (ஜெராக்ஸ்) எடுக்கப்பட்டது.

இது ஆங்கிலேயர் காலத்தில் கி.பி. 1800ல் சென்னையில் கவர்னராக ஆட்சி புரிந்த இராபர்ட் கிளைவ் பாதர் அவர்களின் உத்தரவின்படி ரெவின்யூ கோர்ட்டில் பிறப்பித்த உத்தரவாகும்.

வாங்கல் கிராமத்திலுள்ள இரவீசுவரசுவாமி கோயில் தேவஸ்தானத்துக்கு அர்ச்சனா போகமாக முன்பு கொடுக்கப்பட்ட நிலத்தில் பின்னர் ஏதோ சீர்கேடுகள் நடக்க அது தொடர்பாக கி.பி. 1800-ஆம் வருடம் சூன் மாதம் 21-ஆம் தேதி ரெவின்யூ கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்து அவ்வழக்கு 1800-ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 15ம் தேதி முடிந்து வழக்கின் முடிவில் மேற்படி தேவஸ்தானத்துக்குச் சொந்தமான நஞ்சை, புஞ்சை நிலங்களின் விபரமும், அந்நிலத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தில் கோயில் பூசை, படித்தரம், தீபாராதனை, விசேஷ கட்டளை, மாத உற்சவம், வருடாந்திர உற்சவம், நைவேத்தியம் முதலியவற்றுக்கும் கோயிலில் பணிபுரியும் பணியாளர்களுக்கும் மற்றும் கோயிலில் நாதசுரம், ஒத்து நாதசுரம், தவுல் அடிப்போர், கைத்தாளம் போடுவோர், தமருகம் வாசிப்போர் முதலிய இசைக்கருவிகள் முழங்குவோருக்கும், கோயிலில் நாட்டியமாடும் தேவதாசிகளுக்கும் பங்கிட்டுக் கொடுக்கப் பட்ட நிலமானிய விபரங்கள் ஆகிய அனைத்தும் விரிவாகக் கூறப் பட்டுள்ளன.

மேலும், மேற்படி நிலங்களைப் பெற்றுக்கொண்ட இக்கோயில் சிப்பந்திகள் (பணியாளர்கள்) அவரவர் தங்கள் தொழிலிலே யாதொரு குறையுமில்லாமல் நாள் தவறாமல் செய்ய வேண்டு மென்றும், அவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கப்பட்ட நிலத்தைப் பிறருக்கு விற்கவோ ஒத்திவைக்கவோ கூடாது. அப்படிச் செய்தால் அந்த உத்தரவு செல்லாது. மீறி அப்படிச் செய்பவர்கள் தாங்கள் செய்து வந்த சேவுகத்திலிருந்து (பணியிலிருந்து) நீக்கப்பட்டுப் புதிதாக வேறு ஆட்கள் நியமிக்கப்படுவர் என்றும், பணியில் இருக்கும்போது யாராவது இறந்துபட்டால் வேறு ஆட்கள் நியமிக்கப்படுவர் என்றும் விபரமாகக் கூறியிருப்பதைக் கொண்டு கி.பி 18-19-ஆம் நூற்றாண்டில் மராட்டியர் காலத்தில் நிலவி வந்த அரசியல், சமுதாய நிலைகளை நன்கு அறிய முடிகிறது.

இறுதியில் இத்தருமம் சூரிய சந்திரர் உள்ளவரை நிலைத்து நிற்கட்டும் என்றும், இச்சாசனம் கி.பி. 1802 ஆ சூலை மாதம் 14-ஆம் தேதிக்குச் சமமான தமிழ் துந்துபி ஆ ஆனி மாதம் முதல் தேதி அதாவது 1212-ஆம் பசலி ஆண்டுக்கு உரியது என்றும் இச்சாசனத்தின் நகல் ஷை இரவீசுவர சுவாமி கோயில் அர்ச்சகரிடத்திலே கொடுக்கவும் என்று கூறி இச்சாசனம் எழுதியவன் பெயர் மு. குன்னையன் என்று கூறி இறுதியில் வலப்பக்கம் கலெக்டரின் கையொப்பமிடப்பட்டு அவருடைய பதவியின் பெயர் collector என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது. இடப்பக்கம்

''மொக்காதிக் அப்புராவ்
குசூர் கச்சேரி
தண்டக வயரே''

''ஹவால் பத்தர் சமஸ்தே குசூர்
தி கோர்ட் திண்டுக்கல் விசை ராதோ
துன்பால் பந்து சிரஸ்தேதார்''

என்று மோடி எழுத்தில் எழுதப்பட்டுள்ளது

திருவெலகு சணம் 1க்கு ஷை கிராமத்தில் வள்ளம் 1½ திட்டம் ஷ்த்தாணிகர் சணம் 5க்கு

| நஞ்சை காணி | புஞ்சை நிலம் |
|---|---|
| 3 | 9¾ |

11¼ பெறியமேளம் சணம் 5க்கு குப்பச்சிபாளையம் கிறாமத்தில் புஞ்சை வள்ளம்

3 நாகசுறம் சணம் 1க்கு
2¼ ஒத்து நாகசறம் சணம் 1க்கு
3 டவுலூ சணம் 1க்கு
1½ கைத்தாலம் சணம் 1க்கு
1½க்கு டமறகம் சணம் 1க்கு
வள்ளம் 11¼
16 சின்னமேளம் சணம் 7க்கு குப்பச்சி பாளையத்தில்
3 நட்டுவன் சணம் 1க்கு

3 மத்தளகாறன் சணம் 1க்கு

2 சங்கீதகாறன் சணம் 1க்கு

8 தேவதாசி சணம் 4க்கு சணம் 1க்கு 2ஆக

திட்டம் ஆூ 16

திட்டம் சிப்பந்தி பாபந்து நிலம்

| நஞ்சை காணி | புஞ்சை வள்ளம் |
|---|---|
| 3 | 37 |

| | நஞ்சை காணி | புஞ்சை வள்ளம் |
|---|---|---|
| திட்டம் படித்தறம் உள்பட | 9 | 53 |

1. இந்த ஒம்பது காணி நஞ்சையும் அம்பத்திமூணு வள்ளம் புஞ்சைக்கும் ஷ்த்தலவாறி
2. பங்கு பண்ணின விபறப்படிக்கு அலாயிதாயஷ்தாஷ்து காகூத சக்கரம் படிக்கி அனுப்பிவி
3. ச்சி யிறுக்குற படியிநாலே அதே மேறைக்கி படித் தறம் முதலாகிய சிலவுக்காக நிலவற
4. ம் பண்ணின நிலம் சாகுவனியென்னும் படியாயி பண்ணிவுச்சி அந்த வகை பணத்தில்
5. ஷி தேவஷ்த்தானத்து படித்தறம் தீபாறாதினை விசேஷ கட்டளைபக்ஷசாஷ்ச்சுவம்
6. மாசோஷ்ச்சுவம் சம்வஷ்ச் றொஷ்த்தவம் முதலானது தன்சாதி நடத்தைப் பிறகாறம்
7. நடக்கும் படியாயி பண்ணவும் நெயிவேத்தியம் மாமுல்ப் படிக்கு ஷி தேவஷ்த்தானத்து
8. சிப்பந்தி சனங்களுக்கு பங்குயிட்டுக் குடுக்கவும் சிப்பந்தி சனங்கள் சம்பளத்துக்காக
9. நிலவறம் பண்ணின நிலம் அவனவன் வசம் பண்ணி அவனவன் வுத்தியோகம்
10. தொளுலுலே ஆசற்யிறுக்கும்படி பண்ணவும் அந்த சனங்களதளதன் தொளுலூ

11. லே தானா தவறாமல் சேவுகம் செய்குற வறைக்கும் நிலம் அந்த சனங்களுக்கு நடக்கும்.
12. பின்னையும் ஷி சிப்பத்தி சனங்கள் சம்பளத்துக்கு நெலங்கள் ஷி கிறாமத்து
13. நாட்டு கணக்கன் சனகுடிகுஷ்தள விபரமாயி நெகமம் செயிது யிரு
14. ப்பதுனாலெ யினுமேல் பயிமாயிஷிபடிகு சாத்தி யானால் அந்த சாத்தினெ
15. லத்துக்கு தறத்தின் படிக்கு தீற்வெயில் அஞ்சுலெ ஒரு பங்கு பணம் பொறி
16. ப்பு ஷி தேவஷ்த்தானத்து விசெஷ கட்டிளை செலவு களுக்கு சிப்பந்தி செனங்க
17. ள் வறுஷம் பிறத்திவறுஷம் குடுக்கும்படியாயி நில வறம் செய்தும் ஷி
18. தேவஷ்த்தானத்து படித்தறம் முதலானது சிலவுக்காக சிப்பந்தி சனங்கள்
19. சம்பளத்துக்காக நிலவறம் பண்ணின நிலம் சறுக்காற் குடிகள் சாகுவெளி செ
20. ய்ய வேண்டிய அக்கறையிலும் பின்னையும் படித் தறம் நிலங்களாகட்டு
21. ம் சிப்பந்தி சனங்கள் சம்பளத்துக்காகட்டும் நிலவறம் பண்ணின நிலம்
22. யாதாமொருத்தன் விற்க்கவும் கூடாது ஒத்தி வைக்க வும் கூடாது செல்லாது, யிந்த வுத்தரவு
23. க்கு வித்தியாசமாயி நடந்து கொண்டால் அவனை சேவுகத்திலே யிருந்து
24. தள்ளப்படும் பின்னையும் யென்னென்னைக்கும் யிந்த சேவுகத்தில் வைக்க
25. த் தக்கதுயிலது சிப்பந்தி செனங்களில் யாதா மொறுத்தன் மறுத்தமாயி

26. போனால் சறுக்காறுக்கு அறியப்படுத்தவும் அவனுக்கு வழி செய்து நெமுகம்
27. செய்குரதுக்கு யுக்த்தமான படிக்கி பொக்கியமாய் பாத்து வுத்திரவு பண்ண
28. லாகும் ஷை சேவஷ்த்தானத்து மானியம் சாறி பண்ணுகிறத்துக்காக வறு
29. ஷா வறுஷம் புதுஷாயி வுத்திரவு கேள்க்கவேண்டிய அக்கறையினாலும் பூ
30. ர்வீக முதலானது செம்மையாயி நடக்குற சேதி வுச்சாறித்துக் கொள்ளவும்
31. படித்தறம் முதலானது சிலவு ஷை தேவஷ்த்தானத்து சமாசிற்ச்சு சிப்பந்தி
32. சனங்களுக்கு ஆகிறப்படி மாசம் மாசம் ஆசந்திரார்க்கும் அனுபவித்துக்கொ
33. ண்டு வரவும் இந்த சன்னத்துனுடையெ நக்கலும் ஷை தாலுக்கா தபுஷ்த்தறத்துத் தாக்கல்
34. பண்ணிக் கொண்டு அசலசன்னது ஷை தேவஷ்த் தானத்து அறிச்சகரு
35. டத்திலே குடுக்கவும் ௲௮௱௨ ஷூ சூலாயி மீ ௰௪௨ தமுளு துந்துபி ஷூ
36. ஆனி மீ ௪௨ ௲௨௱௰௨ பசலி
37. மூ. குன்னய்யன்.

## கருவூர் - வாங்கல் - வாங்கலம்மன் கோயில் காகித ஆவணம்

1. . . . கரூறு தாலூக்கா தாசில்தாற் இப்போ இறுக்குறவற் இனுமேல் வறப்பட்டவற்
2. களுக்கு யெளுதிய வுத்திறவு யென்னமென்றால் ஷை தாலூக்காவுக்கு சேற்ந்த வாங்கல்
3. கிறாமத்திலிருக்கும் ஸ்ரீறவீசுவறசுவாமி தெவஷ்த் தானத்துக்கு வெகுநாளாய் ஷை

4. கிறாம முதலான கிறாமங்களில் நிலமானியம் இதில் யெளுதிய விபறப் படிக்கு ஷி கிறாமத்து

5. நாட்டு கணக்கற்ஷ்தலானுபோகம் யெளுதி குடுத்து யிறுக்குறாற்கள் பின்னையும் மா

6. னியம் முன்பிறகாறம் நடப்பிவிக்கும்படியாயிறுக்குற சென்னப் பட்டனத்திலெ யிறு

7. ந்து கெவுணற் லாபட்டுகிளேவு பாதறவற்கள் வுத்திறவு றிவிணி கோறட்டுக்கு ௲அ௱ ௵

8. சூன் மீ ௨௰௧ ௨ யிலெ வந்து றிவிணி கோறட்டுலெ யிறுந்து ௲அ௱ ௵ செபுட்ட

9. ம்பற் மீ ௰௬ ௨ க்கி வுத்திறவு வந்த படியினாலெ அந்த வுத்திறவுபடிக்கு ஷி தேவ

10. ஷ்த்தானத்து மானியம் சாறியாயி விட்டு அது முதலான ௲௨௱௯ பசலி சித்தாற்த்தி

11. ௵ முதல் ௲௨௱௧ பசலி துற்ம்மத்தி ௵ வறைக்கும் வறுஷாந்திறம் தெவஷ்த்தா

12. னம் யினாம் சமாபந்தி பணத்திலெ கோவில் பூசை படித்தறம் முதலான சிலவு சிப்பந்தி

13. செனங்களுக்கு தஷதிக்கு நிலவறம் பண்ணி றொக்கமாயி குடுப்பிவிச்சி வந்துது யிப்போ

14. ௲௨௱௰௨ பசலி துந்துபி ௵ முதல் கொண்டு ஷி தேவஷ்த்தானத்து படித்தறம் முதலா

15. ன சிலவுகளுக்கு சிப்பந்தி செனங்களுக்கு பூமி நிலவறம் பண்ணி குடுத்த விபறம்

நஞ்சை அளவு இருவத்தி புஞ்சை முப்பத்திறெண்டு னாலு அடி கோலால் குளி மாற் கயத்தால் குளி 4க்கு 80க்கு காணிக்கூ காணி 9 ஆக கூட்ட 53

| | |
|---|---|
| இதுக்கு விபறம் | |
| வாங்கல் கிறாமத்து நாட்டு கணக்கு குறு மூற்த்தி அய்யன் முத்து முதலி கணக்கு படிக்கு நஞ்சை காணி 9 | குப்பச்சிபாளையம் கிறாமத்து நாட்டு கணக்கு சுப்பய்யன் கணக்கு படிக்கு புஞ்சை நிலம் 13 |
| இதுக்கு விபறம் | |
| படித்தறம் முதலானதுக்கு நஞ்சை காணி 6 | நிலம் புஞ்சை நிலம் 16 |
| இதுக்கு விபறம் | |
| வாங்கல் கிறாமத்தில் நஞ்சை காணி 6 | குப்பச்சி பாளையம் கிறாமத்தில் புஞ்சை நிலம் 16 |
| இதுக்கு விபறம் | |
| சிப்பந்தி சணம் 17க்கு நஞ்சை காணி 3 | நிலம் புஞ்சை நிலம் 37 |
| இதுக்கு விபறம் | |
| வாங்கல் கிருமத்தில் நஞ்சை காணி 3 | குப்பச்சி பாளையம் கிறாமத்தில் புஞ்சை நிலம் 37 |
| இதுக்கு விபறம் | |
| ஷ்த்தாணிகர் வகையறா சணம் 5க்கு நஞ்சை காணி 3 | நிலம் புஞ்சை வள்ளம் $9\frac{3}{4}$ |
| இதுக்கு விபறம் | |
| மவுசே வாங்கலில் நஞ்சை காணி 3 | குப்பச்சிபாளையம் கிறாமத்தில் புஞ்சை வள்ளம் $9\frac{3}{4}$ |

ஷ்த்தாணிகர் குருக்கள் சணம் 1-க்கு வாங்கல் கிறாமத்தில் நஞ்சை காணி 2

சுயம்பாகி பறிச்சாறக்கன் சணம் 1-க்கு நிலம் 1 வாங்கல் கிருமத்தில் நஞ்சை காணி 2

குப்பச்சி பாளையத்தில் புஞ்சை வள்ளம் 3

மணியம் கணக்கு சணம் 1-க்கு குப்பச்சி பாளையத்தில் புஞ்சை வள்ளம் 4

திருமாலை கட்டி சணம் 1-க்கு ஷை கிறாமத்தில் வள்ளம் $2\frac{1}{4}$

---

**குலோத்துங்கன் காலத்தில் பிச்சை எடுத்துக் கட்டிய கோயில் .....**

( 44-ஆம் இதழின தொடர்ச்சி )

இக்கோயிலில் நமக்கு மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராசராசன் மூன்றாம் இராசேந்திரன் ஆகியோர் காலத்துக் கல்வெட்டுகள் கிடைக்கின்றன.

குலோத்துங்கன் காலத்தில், இராசேந்திர சோழ வளநாட்டு நென்மலினாட்டுக் கொற்றூர்' என்று இவ்வூர் அழைக்கப் பட்டுள்ளது.

கொற்று என்றால் சோறு என்று பொருள்படும். தட்டளி கொட்டிகளுக்கு (வாத்தியம் வாசிப்போருக்கு) கொற்று (சோறு) திங்கள் ஒன்றுக்கு நாலு கலம் பத்துக்குறுணி நாழி உரியாக. பன்னிரண்டு திங்களுக்கு நெல்லு நிறைமதி நாராயத்தால் ஐம்பத் தேழு கலம்' நித்திய பூசைக்குக்கொடுத்த செய்தியை வரகுண பாண்டியனின் (கி.பி. 862) திருச்செந்தூர்க் கல்வெட்டு குறிப்பிடு கின்றது.

கொற்று - கொற்றூர் பற்றிய தொடர்பினை மேலும் ஆராய்தல் வேண்டும்.

**கோயில் பெயர் :** இன்று இக்கோயில் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் என்று அழைக்கப்படுகிறது. கல்வெட்டுகளில், 'திருவிடைக்காடுடைய நாயனார் கோயில் என்றும்,[16] 'திருவிடைக்காடுடைய நாயகர் கோயில்,[17] என்றும், 'திருவிடைக்கா உடையார்,[18] என்றும் கோயில் இறைவன் பெயர்கள் காணப்படும்.

சுரம் என்பது காடு. தொண்டை நாட்டில் உள்ள திருச்சுரம் இப்பொழுது திரிசூலம் என வழங்குகிறது அந்நாட்டில் உள்ள மற்றோர் ஊரின் பழம்பெயர் திருவிடைச்சுரம். அது திருவடிசூலம் எனத் திரிந்து விட்டது.[19]

ஆனால் இங்குள்ள இறைவன், நல்ல தமிழில் 'திருவிடைக் காடுடைய நாயனார்' என்று கல்வெட்டுகளில் குறிக்கப்படுகின்றான்

தேவாரப் பாடல்களின் மூலம் ஈசன் உறையும் காடுகளைப் பற்றிய குறிப்புகள் அறியப்படுகின்றன. திருமறைக்காடு முதலிய காட்டுத் திருப்பதிகளை ஒரு பாடலில் தொகுத்துப் பாடியுள்ளார் திருநாவுக்கரசர். திருமறைக்காடு முதலாகத் திருவெண்காடு ஈறாக எட்டுப்பதிகள் அப்பாட்டிலே குறிக்கப்படுகின்றன.[20]

"மலையார் தம் மகளோடு மாதேவன் சேரும்
மறைக்காடு, வண்பொழில்-சூழ் தலைச்சங்காடு
தலையாலங்காடு, தடங்கடல்-சூழ் அந்தன்
சாய்க்காடு, தள்ளபுனற் கொள்ளிக் காடு
பலர்பண்பாடும் பழையனூர் ஆலங் காடு
பனங்காடு பாவையர்கள் பாவம் நீங்க
விளையாடும் வலைதிளைக்கக் குடையும் பொய்கை
வெண்காடும் அடையவினை வேரு மன்றோ"

— அடைவுத்திருத்தாண்டவம்

இங்ஙனம், பல்வேறு காடுகளைப் பற்றித் திருநாவுக்கரசர் குறிப்பிட்டபோதிலும் அவற்றுள் இத் 'திருவிடைக்காடு' இடம் பெறாமை நோக்குதற்கரியது. மேலும் பாடல் பெற்ற தலமாகவோ, வைப்புத்தலமாகவோ இக்கோயில் வைத்தெண்ணப்படவில்லை.

எவ்வாறிருப்பினும், இறைவனுக்குத் 'திருவிடைக்காடுடைய நாயனார்' என்ற பெயர் அக்காலத்திலேயே வழக்கில் இருந்திருப்பது கல்வெட்டுகளின் மூலம் தெளிவாகிறது

நாட்டுப் பிரிவுகள் : முதலாம் இராசராசன் ஆட்சிக்காலத்தில் அவனது ஆணைப்படி சோழநாடு 1. அருள்மொழித் தேவ வளநாடு 2. சத்திரிய சிகாமணி வளநாடு 3. உய்யக் கொண்டான் வளநாடு 4. நித்தவிநோத வளநாடு 5. பாண்டிய குலாசனி வளநாடு 6. கேரளாந்தக வளநாடு 7. இராசாஸ்ரய வளநாடு, 8. இராசராச வளநாடு 9. இராசேந்திர சிங்க வளநாடு என்று ஒன்பது வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இவ்வளநாடும் சில நாடுகளாகப் பிரிக்கப்பட்டன.

நாட்டை இக்காலத்து வட்டத்திற்குச் சமமாகவும், வளநாட்டை மாவட்டத்திற்குச் சமமாகவும் பிரித்திருந்தனர்.

அதையொட்டி அவன் வழிவந்த குலோத்துங்கனும் தன் நாட்டைப் பல வளநாடுகளாகப் பிரித்திருந்தான். அவற்றுள் ஒன்று இராசேந்திர சோழ வளநாடு. இதற்கு உட்பட்ட பகுதி நென்மலி நாடு. அதில் உள்ள ஊர் 'கொற்றூர்' என்று கல்வெட்டு கூறுகிறது.

கல்வெட்டுகள் : முன்னர் குறிப்பிட்டவண்ணம் மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராசராசன், மூன்றாம் இராசேந்திரன் ஆகியோரது கல்வெட்டுகள் இக்கொற்றூர்க் கோயிலில் காணப்படுகின்றன.

கொற்றூரில் இருந்த குலோத்துங்க சோழப் பேரிளமையாரான சோழமண்டல வேளைக்காறர் இக்கோயில் திருக்கற்றளியும், திருவர்த்த மண்டபமும், திருமண்டபமும் செய்தமையைக் கல்வெட்டு தெரிவிக்கிறது [21] அங்ஙனம் திருக்கோயில் எடுக்குமிடத்து அவர்கள் பிச்சையும், பண்டாரமிகுதியுங் கொண்டு இதனைச் செய்ததாக அக்கல்வெட்டு கூறுகிறது.

இச்செய்தி, இதுகாறும் நாம் அறியாத ஒன்றாக உள்ளது கோயில் கட்டுவதற்கு இரந்தும், கருவூல மிகுதியில் இருந்தும் பொருள் எடுத்தமை ஆய்வுக்குரியது.

''ஈயென இரத்தலும் இழிந்தே'' என்பது ஆன்றோர் மொழி.

''ஈ தா கொடு'' என்பது

"இழிந்தோன் ஒப்போன் மிக்கோன் கூற்று" என்பது தொல்காப்பியம்.

இவற்றுக்கு மாறாக இங்கு 'இரந்து' கோயிலெடுத்த செய்தி குறிப்பிடப்படுகிறது. 'இரத்தல் தவறென்ற கருத்து இருப்பினும், ஒரு நல்ல காரியத்திற்காக 'இரத்தல்', தவறில்லை என்றுதான் இவ்விடத்தில் நாம் அமைதி கொள்ள வேண்டும்.

இனி, வேறொரு வகையாகவும் இவ்வாறு கோயில் கட்டியமைக்கு அமைதி காணலாம்.

இக்காலத்தில், கோயிலுக்குச் செல்பவர்கள் நடைப்பயணமாக வந்து வழிபடுகின்றேன் என்று ஆண்டவரிடம் வேண்டிக் கொள்வதைப்போல - கோயில் கருவூலத்தில் இரந்து பொருள் சேர்ப்பிக்கின்றேன் என்று வேண்டுவதைப்போல குலோத்துங்க சோழப் பேரிளமையாரான சோழ மண்டல வேளைக்காறர் 'பிச்சை' எடுத்துக் கோயில் கட்டுகிறேன் என்று நேர்ந்து கொண்டிருக்கலாம். இந்த நேர்த்திக் கடனைத் தீர்த்தற் பொருட்டு அவர்கள் பிச்சையெடுத்துக் கோயில் கட்டத் தொடங்கியிருத்தல் வேண்டும். அவ்வாறு பணி நடந்து கொண்டிருக்கும்போது மேலும் பொருள் தேவைப்பட்டபோது, பண்டாரத்தில் எஞ்சியிருக்கும் தொகையை இதற்குப் பயன்படுத்தியிருக்கலாம் என்று அமைதி காணலாம்

இனி இங்கு குறிப்பிடப்பெறும் 'சோழ மண்டல வேளைக் காறர்' சோழ அரசருடைய மெய்க்காப்பாளர் என்ற அளவில் திருமெய்க்காப்பர்[22] என்றும், பாண்டியர்களிடம் இருந்தவர்கள் 'ஆபத்துதவிகள்[23] என்றும், அழைக்கப் பெற்றனர். பிற்காலத்திய விஜயநகரப் பேரரசிலும்கூட இவ்வகை வேளைக்காறப் படையினர் தங்களுடைய பண்டைய தனித்தன்மையையே இழந்த நிலையில் - அரசனைச்சுற்றி நின்ற படைத் தலைமை வேளிர்கள் என்றளவில் காணப்பட்டனர்.[24]

பிச்சை கொண்டு கோயில் எடுத்தமைக்கு முரணிய நிலையில் மறவர் நாட்டையாண்ட மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் ஒரு மன்னன் இராமநாதசுவாமி இறைவனுக்கு வழிபாடு செய்வதற்கான

செலவுகள் தம் செல்வத்தில் இருந்தே நடத்தவேண்டும் என்றும் பிறர் திரவியங்கள் 'பாவ திரவியங்களாக' இருத்தல் கூடும் என்று கூறியிருத்தலும் இங்கு ஆய்வுக்குரியதாகக் கொள்ளலாம்.[25]

**இறைவன் :** இக்கோயிலில் காணப்பெறும் மற்றொரு கல்வெட்டில் குலோத்துங்கச் சோழனது ஆட்சியாண்டைச் குறிப்பிடும் பகுதி சிதைவுபட்டுள்ளது. அக்கல்வெட்டும் கொற்றூர் திருவிடைக்காடுடைய நாயனார் கோயில் இரந்து திருக்கற்றளித் திருப்பணி செய்தமையைத் தெரிவிக்கிறது.[26] முதற் கல்வெட்டில் கோயில் எடுத்த செய்தி மட்டும் கூறப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் இறைவன் 'திருவிடைக்காடுடைய நாயனார்' என்றும் கூறப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

முதற் கல்வெட்டில் சோழமண்டல வேளைக்காரர் இப்பணி செய்தமை தெரிவிக்கப்பட்டுள்ளது இக்கல்வெட்டில், திருக்கற்றளித் திருப்பணி செய்தவனாகக் கனகமங்கலமுடையான் புற்றிடங் கொண்டான் உடையபிள்ளையான திருநாவுக்கரையன் என்பவன் குறிப்பிடப்படுகின்றான்.

'புற்றிடங்கொண்டான் என்பது திருவாரூர் மூலத்தானமுடைய ரான வன்மீகநாதரின் திருப்பெயர்களுள் ஒன்று. இவன் இக்கோயிலில் 'எம்பெருமக்கள்' மூவரையும் எழுந்தருளுவித்து, அவர்களுக்குத் திருவமுதுபடிக்குத் தேவதானமும் கொடுத்ததை அக்கல்வெட்டு கூறுகிறது.[27]

எம்பெருமக்கள் மூவர் எனப்படுபவர் அப்பர், சம்பந்தர் ஆரூரர் ஆகியோராவர் இவ்வாறு பிரதிமங்கள் எழுந்தருளுவிப்பதும் தொன்றுதொட்டு வந்த ஒரு மரபேயாகும்.

தஞ்சைப்பெரியகோயில் கட்டப்பெற்றது முதல், ஸ்ரீகாரியம் ஆராய்கின்ற அலுவலனாகத் திகழ்ந்தவன் பொய்கைநாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்தவேளான். இவன் இராசராசேச்சுரத்தில் திருஞானசம்பந்த அடிகள், திருநாவுக்கரைய தேவர், நம்பியாரூரர், நங்கைபரவையார், மெய்ப்பொருள் நாயனார் சிறுத்தொண்ட நாயனார் என்போருக்குச் செப்புப் படிமங்கள் எழுந்தருளுவித்து அவற்றிற்கு அணிகலன்களும் அளித்துள்ளான்.[28]

இதையொட்டியே, கனகமங்கலமுடையான் புற்றிடங் கொண்டான் உடைய பிள்ளையான திருநாவுக்கரையனும் இங்கு மூவர் முதலிகளை எழுந்தருளுவித்து, அவர்கள் திருவமுதுக்குத் தேவதானமும் கொடுத்திருக்கின்றான்.

இதே குலோத்துங்கச் சோழனுடைய முப்பத்தேழாவது ஆட்சி யாண்டில் தேவாரம் பெற்ற தலமாகிய திருப்புறம்பயத்தில் திருவலஞ்சுழி உடையார், புற்றிடங்கொண்டார், அறம் உரைத்த நாயனார் ஆகியோர் திருமேனிகள் அக்கோயிலில் எழுந்தருளுவிக்கப் பட்டது. இச்செய்தி மூன்றாம் இராசராசனுடைய 19-ஆவது ஆட்சியாண்டு வரை கல்லில் செதுக்காமல் இருந்து, இராசராச சோழனுடைய 20-ஆவது ஆட்சியாண்டில் கல்லில் பொறிக்கப் பெற்றது. அறமுரைத்த நாயனார் என்பது தட்சிணாமூர்த்தியைக் குறிக்கும் 'நால்வர்க்கும் அறம்பயம் உரைத்தனை புறம்பயம் அமர்ந்தோய்' என்றும் அத்தலத்துத் தேவார அடியை உட்கொண்டு அப்பெயர் அமைந்திருக்கலாம்.

**கற்றிருமேனிகள் :** கொற்றூரில் எழுந்தருளுவிக்கப்பட்ட 'எம்பெருமக்கள்' மூவர் படிமங்கள் கல்லால் எழுந்தருளுவிக்கப் பட்டது என்ற செய்தியை அடுத்துவரும் குலோத்துங்கச் சோழனுடைய 14-ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில், "...... எம்பெரு மக்கள் முதலிகள் மூவரையும் சிலையாலே எழுந்தருளுவித்து" என்ற கல்வெட்டுத் தொடர் குறிப்பிடுகிறது. மேலும் இவர்களுக்குத் தனித்தனியாகத் திருக்கோயிலும், திருமண்டபமும் எடுத்த செய்தியை அந்தக் கல்வெட்டு தெரிவிக்கிறது [29]

இவ்வாறு எழுந்தருளுவிக்கப்பட்ட நாயன்மார்களுக்குப் புற்றிடங்கொண்டான் திருவமுதுபடிக்காகக் கொடுத்த தேவ தானத்தைத் திருவிடைக்காடுடைய நாயனார் கோயில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவப்பிராமணர்கள் ஏற்றுக்கொண்டு திருவமுதுப்படி செய்ய ஒப்புக்கொண்ட நெல்லின் அளவும் இக்கல் வெட்டில் கூறப்பட்டுள்ளது.[30]

கொற்றூர் பட்டன், குலோத்துங்க சோழபட்டன், குலோத்துங்க சோழபட்டனான பிள்ளை, பணபதபட்டன், அறுநூற்றுவன்பட்டன்

பிரான், சொக்கன் கூத்தன் ஆகியோர் பெயர்கள் கல்வெட்டில் வருகின்றன.

அவ்வாறு திருவமுது செய்யும்போது நிலம் பெற்றுடையாரும், கொண்டுடையாரும், பிறந்துடையாரும் செய்யவேண்டும் என்ற குறிப்பும் அக்கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் நிலம் பெற்றவர்கள், அவர்களைச் சார்ந்தவர்கள் அவர்களுடன் பிறந் தவர்கள் ஆகிய அனைவரும் இத்தொண்டைத் தொடர்ந்து செய்து வரவேண்டும் என்பது தெளிவாகும்.[31]

**ஓடேந்துசெல்வர் :** இதே காலத்தில் ஓடேந்துசெல்வர் என்பவரும் திருநாவுக்கரசர் திருமேனியை எழுந்தருளுவிக்கின்றார்.[32] இதற்குத் திருவமுது படைப்பதற்காக இக்கோயில் முப்பது வட்டத்துக் காணியுடைய சிவப்பிராமணர்கள் அவரிடம் இருந்து பெற்றுக்கொண்ட நிலத்தில் இருந்து நித்தம் நாநாழி அரிசி செலுத்த ஒப்புக்கொண்டதைப் பிறிதொரு கல்வெட்டு தெரிவிக் கின்றது. 'ஓடேந்துசெல்வர்' என்ற நல்ல தமிழ்ப்பெயர் 'பிட்சாடனர்' என்ற சொல்லோடு பொருந்த வருவது காணத்தக்கது.

இக்கல்வெட்டில் 'சிற்பாசிரியக் காணியுடைய' என்ற சொல் வருகிறது. இது சிற்பாசிரியக் காணி என்பதாகும். பரம்பரையாக அனுபவிக்கும் உரிமையுடைய நிலம் அவனுக்கு வழங்கப்பட்டமையும் இதன் மூலம் அறியப்படுகிறது.

இனி, இதே மன்னனுடைய, இதே ஆட்சியாண்டைச் சேர்ந்த மற்றொரு கல்வெட்டில் கனகமங்கலமுடையான் புற்றிடங்கொண் டான் உடைய பிள்ளையான திருநாவுக்கரையன் மண்டபத் திருச்சுற்று எடுத்த செய்தி குறிப்பிடப்படுகிறது. பெருமக்க ளுக்குக் கோயில் எடுத்த செய்தியும் அதில் குறிப்பிடப்படுகிறது. மேலும், திருநாமத்துக் குடிநீங்காக் காணியாக 840 குழி நிலத்தைப் பந்தணை நல்லூருடையான் பக்கலும், புறக்குடையான் பக்கலும் வைத்தமை அறியப்படுகிறது.[33]

**திருவாபரணம் :** இக்கோயில் மகாமண்டபத்தின் வடக்கு வெளிச்சுவரில் ஒரு கல்வெட்டு உள்ளது. கி.பி. 13—14-ஆம்

நூற்றாண்டைச் சேர்ந்த அக்கல்வெட்டில் மணலூர்க்கிழவர் க(ற்)ப்பகர் வெள்ளியால் ஆன திருவாபரணம் ஒன்றை உடையார் திருவிடைக்காடுடையாருக்குச் செய்தளித்தமையை அக்கல்வெட்டின் மூலம் அறிந்து கொள்ளமுடிகிறது.[34]

**இராசராசன் :** மூன்றாம் இராசராசன் (கி.பி. 1216 1260) இராசகேசரி என்ற பட்டம் புனைந்தவன். சிலவிடங்களில் பரகேசரி என்ற பட்டம் காணப்படுகின்றது.

இவன் ஆட்சிக் காலத்தில் சோழராச்சியம் பல்வகைத் துன்பங் களுக்குக் கொணர்ந்த சோழர் பேரரசை அதன் நிலை குன்றாதவாறு தாங்கிப் புரந்தற்குரிய ஆண்மையும், வீரமும் இவன்பால் இல்லாமல் போயினமையே அதன் வீழ்ச்சிக்கு முதற் காரணம் ஆகும்.[35]

இவன்காலத்துக் கல்வெட்டுகள் எல்லாச் சிவன் கோயில் களிலும் மிகுதியாக உள்ளமையால் சைவசமயம் உயர்நிலையில் இருந்தது என்பது நன்குணரக் கிடக்கின்றது. வைணவம் சமணம் முதலான சமயங்களையும் இவன் தன் முன்னோர்களைப் போல ஆதரித்துள்ளான், ஆகமத் தொடர்புடைய மடங்களும், பாசுபதம், காபாலிகம் முதலான அகச்சமய மடங்களும் இவன் காலத்தில் சோழ ராச்சியத்தில் யாண்டும் பரவியிருந்தன.

இவன் பட்டத்தரசி புவனமுழுதுடையாள் என்னும் பெயரினள். மூன்றாம் இராசேந்திரன் இவனது மகனாவான்.

இவன் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுகள் இரண்டு இக்கோயிலில் உள்ளன. ஒன்று 11-ஆவது ஆட்சியாண்டைச் சேர்ந்தது. மற்றொன்று 13ஆவது ஆட்சியாண்டைச் சேர்ந்தது.

முதல் கல்வெட்டில் ஒவ்வொரு குடுப்பும் குடுப்புக் கூலியாகச் செலுத்த வேண்டிய பணம் பற்றிக் குறிப்பிடப்படுகிறது. குற்றம் செய்தவர்களைத் தண்டிக்கும் முறைமை பற்றிக் குறிப்பிட்டு, 'குற்றம் செய்தாரைத் தண்டம் கொள்ளுமிடத்து' வெள்ளாளர்க்கு விலக்களிக்கப்பட்டுள்ளது

இவ்வாறு வெள்ளாளர்க்கு மட்டும் விலக்களித்தமை பற்றி ஊர்ப்பெருமக்கள் பிள்ளையிடம் (அரசன்) சென்று முறையிடு கின்றனர். வெள்ளாளர்க்குப் பரிவாக ஓலை வந்தததையும் சுட்டிக்

காட்டுகின்றனர். அதன் பின்னர் 'குற்றம் செய்தாரை தண்டம் கொள்ளுமிடத்து வெள்ளாளரையும் விடாதொழியவும்' என்று ஆணை பிறப்பிக்கப்படுகிறது. மேலும அவ்வாறு குற்றம் செய்த வெள்ளாளர் கொடையறுத்தல் வேண்டும் என்றும் குறிப்பிடப் பட்டதாகக் கல்வெட்டு தெரிவிக்கின்றது.

சபையார் தம் செலவின் பொருட்டுப் பொதுமக்களிடம் வாங்கிவந்த 'சபாவிநியோகம்' என்ற வரியும் இதில் குறிப்பிடப் படுகிறது இந்தக் கல்வெட்டை எழுதியவன் கூட்டக் கணக்கு இராசேந்திரசோழப் பிரியன் என்பவனாவான்.[36]

இவனுடைய மற்றொரு கல்வெட்டு பணியாளர் கூட்டத்தார் செய்யவேண்டிய பணிகள் பற்றிக் குறிப்பிடுகிறது [37]

**மூன்றாம் இராசேந்திரன்** (கி.பி.1244-1279): இவன் 'பரகேசரி என்ற பட்டம் புனைந்து அரசாட்சி புரிந்தவன். இவனது ஏழாவது ஆட்சியாண்டு முதல் தான் இவன் மெய்க்கீர்த்தி கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.[38]

இராசேந்திரனது ஆட்சியில் 33-ஆவது ஆட்சியாண்டுக் கல் வெட்டு ஒன்று வேதாரணியத்தில்[39] இருந்ததால் இவன் 33 ஆண்டுகள் ஆட்சிபுரிந்து கி.பி. 1279ல் இறந்திருத்தல் வேண்டும் என்பது திண்ணம். இவனது பட்டத்தரசி சோழகுலமாதேவி என்னும் பெயருடையாள்;[40] இவனுடைய தலைநகரம் கங்கை கொண்ட சோழபுரமாகும்.

இக்கோயிலில் இவனது ஐந்தாவது ஆட்சியாண்டைச் சேர்ந்ததும் 11-ஆவது ஆட்சியாண்டைச் சேர்ந்ததுமாக இரண்டு கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

ஐந்தாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டில்[41] இராசேந்திர சோழவளநாட்டு நென்மலி நாட்டு வருத்தந் தவிர்த்த சோழச் சதுர்வேதிமங்கலத்துப் பிடாகை இராசேந்திரசோழப் பேரிளமை நாட்டு நாட்டவரும், ஊரவரும் - குலோத்துங்க சோழப் பேரிளமை நாட்டு நாட்டவரும், ஊரவரும் கூட்டங்குறைவறக் கூடி நிறைவற நிறைந்து அவர்கள் தம்முள் இசைந்து, திருவிடைக்காடுடைய நாயனார்க்கு நெல் தண்டிக்கொள்ளச் சொன்ன செய்தி குறிப்பிடப் படுகிறது.

அவ்வாறு கொள்ளுமிடத்து, வீரக்கொடியார்[42] இறைவர்க்கு நெல் கொடுக்காதவர்களது வீடுகளின் அடைத்த கதவைத் திறந்து வெண்கலம் பறித்து மண்கலம் தகர்த்தும் தண்டிக் கொள்வார் களாகவும் என்று அக்கல்வெட்டு கூறுகிறது.

இவ்வாறு, திருவிடைக்காடுடைய நாயனார்க்கு நெல்கொடுக்க இசைந்த செய்தி இவ்வேந்தனின் தந்தையாகிய இராசராசன் காலத்து நிகழ்ந்தது, மறுபடியும் நடந்து அது கல்லில் வெட்டப் பட்டதாக அக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

இனி, வெண்கலம் பறித்து மண்கலம் தகர்த்துக் கொள்வார் களாகவும் என்ற வழக்கம் முற்காலந்தொட்டு இருந்தமையை திருச்சி மாவட்டத்தில் உள்ள கல்வெட்டின் மூலம் தெரிந்து கொள்ளலாம்[43]

இவ்வரசனின் ஐந்தாவது ஆட்சியாண்டு இருநூற்று முப்பதாவது நாளில் வெட்டப்பட்ட மற்றொரு கல்வெட்டும்[44] இங்குள்ளது. அக்கல்வெட்டு கிராம காரியஞ் செய்கின்ற கூட்டப் பெருமக்கள் எடுத்த முடிவினைத் தெரிவிக்கின்றது.

இக்கல்வெட்டின் மூலம், அக்காலத்தே கிராமசபையார் எடுக்கின்ற முடிவுகளும் கோயிற் சுவர்களில் என்றென்றும் அழியா வண்ணம் இருப்பதாகப் பொறிக்கப்பட்டதை நாம் உணரலாம்.

வரிவசூல் முறையின்றி வசூலிக்க முற்பட்ட போது கிராம சபையார் அனைவரும் தம்முள் கூடி முடிவெடுத்த கல்வெட்டொன்று தஞ்சை மாவட்டம், மன்னார்குடி கயிலாயநாதர் கோயிலிலும், இராசகோபாலசாமிப் பெருமாள் கோயிலிலும் வெட்டப்பட் டிருப்பதை அக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

'ஸபையாரும் மஹாஸபையாரும் ஜயங்கொண்ட சோழப் பேரிளமை நாட்டும் ராஜாதிராஜப் பேரிள்மைநாட்டும், நாலாயிரப் பேரிளமை நாட்டும், ஆளப்பிறந்தான் பேரிளமை நாட்டும், கங்கை கொண்ட சோழப் பேரிளமை நாட்டும் நாட்டவரோடும்கூட இருந்து விவஸ்தை பண்ணினபடி நம்மூர்ப்பரப்பிலே.....,[45]

இதைப்போன்றே இவ்வூர்க் கல்வெட்டிலும் இராசேந்திர சோழப்பேரிளமை நாட்டு நாட்டவரோடும், குலோத்துங்க சோழப் பேரிளமைநாட்டு நாட்டவரோடும் கூட்டம்கூடிய செய்தி குறிப்பிடப் பட்டுள்ளது.

---

1. மன்னார்குடி வட்டம், பெரியகொத்தூர், திருவிடைக் காடுடைய நாயனார் கோயில் கல்வெட்டுகள்
2. இ.க.ஆ.அ. 1908, பிரிவு இரண்டு, பத்தி 64.
3. புதுக்கோட்டைக் கல்வெட்டுகள் எண். 163, 166
4. 190/1907 இ.க.ஆ.அ.
5. பிற்காலச்சோழர் வரலாறு, சதாசிவப்பண்டாரத்தார், பக். 412
6. 1908/பத்தி 64, 65
7. புதுக்கோட்டைக் கல்வெட்டு 152, 158, 161, 176, 170
8. 461/1913, 458/1913, 435/1913
9. தெ.இ.க. தொகுதி எண் மூன்று எண். 23, 24, 141/1905.
10. தெ.இ.க. தொகுதி ஆறு/553, எபிகிராபியா கர்னாடிகா தொகுதி 10 எம். எஸ். 44 (பீ) மேலது எண்/25
11. நெல்லூர்க் கல்வெட்டுகள் எண் 69, 72 ஜி 86 மேலது எண். 53இ 521/1908
12. 586/1907; 601/1907; 435/1911
13. பண்டாரத்தார், பக். 410
14. கள ஆய்வாளர்கள் ஆய்வு மேற்கொண்டு கடிதம் நேரில் கொடுத்த நாள். 26-6-1978
15. 9-2-80 அன்று கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டன.
16. ஊர்க்கல்வெட்டு எண் 6
17. ஊர்க்கல்வெட்டு எண் 8
18. ஊர்க்கல்வெட்டு எண். 3
19. தமிழகம் ஊரும் பேரும், ரா. பி. சேதுப்பிள்ளை, பக். 10, 312/1901; 355/1908
20. ரா. பி. சேதுப்பிள்ளை, தமிழகம் ஊரும்பெரும், பக். 157
21. ஊர்க்கல்வெட்டு எண். 1
22. மார்க்கோபோலோ, தொகுதி இரண்டு

23. டி. வி. மகாலிங்கம், 'தென்னிந்திய அரசு' தொகுதி இரண்டு பக். 69
24. மா. பாலசுப்பிரமணியம், சோழர்களின் அரசியல் கலாசார வரலாறு இரண்டு பக். 69
25. சேதுபதி செப்பேடுகள் பக். சி. 14. செப்பேடு எண். 1., பக். சி. 57 செப்பேடு எண். 57 சகம்; 1573
26. ஊர்க்கல்கவெட்டு எண். 6
27. மேற்படி
28. தெ.இ.க. தொகுதி எண். இரண்டு எண். 38, 40, 43
29. ஊர்க்கல்வெட்டு எண். 7
30. மேலது
31. நிலம் பெற்றுடையார் தானமாக-இலவசமாகப் பெற்றவர் சிவப்பிராமணர் என்றும், விலைக்குக் கொண்டுடையார் குத்தகைதாரர் என்றும், பிறந்துடையார் பாரம்பரியமாக, அனுபவித்து வருபவர் என்றும் கொள்ளலாம் என்பார் கல்வெட்டறிஞர் திரு. சு. இராசகோபால்.
32. ஊர்க்கல்வெட்டு எண். 8
33. ஊர்க்கல்வெட்டு எண். 9
34. ஊர்க்கல்வெட்டு எண். 3
35. தி. வை. சதாசிவப்பண்டாரத்தார் பிற்காலச் சோழர் வரலாறு பக். 433
36. ஊர்க்கல்வெட்டு எண். 4
37. ஊர்க்கல்வெட்டு எண். 5
38. தெ.க.க. நான்கு /511
39. தெ.க.ஆ.அ. 492/1904
40. இ.க.ஆ.அ. 427/1921
41. ஊர்க்கல்வெட்டு எண். 10
42. வீரக்கொடியார் - படைத்தொழிலில் ஈடுபட்டவர்கள்
43. திருச்சிமாவட்டம், நெரூர் திருவெறும்பூர்க் கல்வெட்டில் தீமை புரிந்தவர்களின் வீட்டில், மண்கலம் உடைத்து வெண்கலம் எடுத்துக் கொள்வதாகவும் என்ற தொடர் வருகிறது.
44. ஊர்க்கல்வெட்டு எண். 11
45. தெ.இ.க. தொகுதி ஆறு 50, 58

## நாகூர் தர்காக் கல்வெட்டு

43-ஆம் இதழின் தொடர்ச்சி

### தெற்குப் பக்கக் கல்வெட்டுகள்

1) ஆங்கிரஸ வருஷம் மாசி மாசம் 9
2) அசறது மீரா சாயபு அவர்கள் த
3) ற்காவில் இந்த மினாற் பதினோர
4) ங்கனம் ரா பிரதாபசிங்கு மக
5) ாராசா சாயிபு அவர்களுடைய தற்மம்
6) சேகு அப்துல் மல்லிகையவர்கள் ராம
7) ராசா சாயிபு அவர்கள் உத்தாரப் ப
8) டிக்கு கட்டிவைத்த மனா
9) றா

### மேற்குப் பக்கக் கல்வெட்டுகள்

1) அசரத்து மீரா சாயிபு
2) ரா ஸ்ரீ பிறதாப சிங்கு ம
3) காராச சாயிபு அவர்
4) கள் கட்டிவச்ச மனாறா
5) ரா மானோசி சிகதாபூரா
6) அவர்கள் ரா ராமோசி
7) னாயக்கர் அவர்கள் மத்தி
8) ஷத்தில் உத்தாரப்படிக்கு சேகு
9) மலிக்கு நாகூர் மத்திஷத்
10) திப் மனாரா பதினொரு நிலம் க
11) ட்டி முடிஞ்சுது யுவ வருஷம் தை மாசம்

இரண்டாம் ஏகோசி காலத்தில் 6-12-1735 அன்று பாசிக்கடை மீரா என்பவரும், பிரதாபசிங் காலத்தில் 9-6-1758 அன்று பாசிப் பேட்டை அசமது ராவுத்தர் போன்ற பலரும் தஞ்சை கொங்கணேசுவரர் கோயிலுக்கு மகமைக் கொடை அளித்துள்ளனர். கானுசாயபு என்பவர் மராட்டியர் காலப் பெரியகோட்டை மாகாண அதிகாரி அவர் காலத்தில் திருமக்கோட்டை ஞானபுரீசுவரர் கோயில் கொடை பெற்றுள்ளது.[1]

## மராத்தி மொழிக் கல்வெட்டில் மொழி பெயர்ப்பு

மினார் எனப்படும் பெரிய வெளிக் கோபுரத்தின் அடிப்பகுதியில் வடக்குப் பக்கம் இக்கல்வெட்டு உள்ளது [2]

> "சுபம். ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகனம் 1674 கலியுகாப்தம் 4853 ஆங்கிரச வருடம் மாசி மாதம் 15ஆம் தேதி சுக்கில பட்சம் பவுர்ணமி அன்று அசரத் மீரா சாகிப் அவர் களுடைய சன்னிதிக்கு மேற்கு போசள குலதீப மகாராசா ராசஸ்ரீ ஏகோசி அவர்கள் மகனான ஸ்ரீ துளசி ராஜா சாகிப் அவர்கள் வணங்கி அளித்த இடத்தில் பசுக் களையும் அந்தணர்களையும் காப்பாற்றுகின்றவரான ஸ்ரீமத் சத்ரபதி மகாராசா ராசஸ்ரீமந்த் பிரதாப சிம்ம மகாராசா சாகேப் அவர்கள் 11 நிலைகளையுடைய கோபுரத்தைத் தருமமாகக் கட்டி அளித்தார்.
>
> சர்கேல் மனோசி செகதாப் அவர்கள் நாகூர் பந்தர் கார்பார் அருணோசி போன்சலே, மத்தியஸ்தர் ஷேக் அப்துல் மல்லிக் ஆகியோர் இந்த அறச்செயலை நிறை வேற்றினர்.
>
> அசரத் சாகிப் அவர்களுடைய இடத்தில் பக்திபூர்வமாக இந்த ஆவணம் சந்திரசூரியர் உள்ளவரை நடக்கவேண்டும் என்று எழுதிக் கொடுக்கப்பட்டது. வமிச பரம்பரையாக இந்தக் கொடையை வளர்த்துவர வேண்டும் என்ற என்ற எண்ணத்துடன் இந்தக் கட்டிடம் கட்டப்பட்டது.

## மராட்டிய மன்னர்களும் நாகூர் தர்காவும்

இன்றும் தஞ்சையில் உள்ள படே தர்கா உள்ளிட்ட பல தர்காக்களுக்கும், பள்ளிவாசல்கட்கும் காப்பாளராக உள்ள தஞ்சை மராட்டிய அரசு குடும்பத்தினர் நாகூர் தர்காக் கந்தூரி விழாவுக்குச் சந்தனமும், சாதரா எனப்படும் பட்டுச் சால்வையும் அனுப்பி வருகின்றனர்.

நாகூர் தர்காவில் அரசர்களுக்குரிய மரியாதையுடன் அவை வரவேற்கப்படுகிறது. அங்கு தஞ்சை மராட்டிய அரச குடும்பத்தின் நலனுக்காகப் பாத்தியா ஓதப்படும். இவை தஞ்சை மராட்டிய

மன்னர்களின் சமரச மனப்பான்மையைக் காட்டுகிறது. நாகப் பட்டினம் பகுதியை, மராட்டிய ஆவணம் சில திருவாரூர்ச் சீமை நாகப்பட்டினம் பர்க்கானா என்றே அழைக்கிறது.[3]

இந்த உயர்ந்த மனப்பான்மையும், மத நல்லிணக்கமும் இன்று நம் நாட்டுக்குத் தேவை.[4] மேற்கண்ட வரலாற்றுச் செய்திகள் நமக்கு அம்மனப்பான்மையைத் தோற்றுவிக்க உதவுமாக.

---

1. புலவர் செ. இராசு, தஞ்சை மராட்டியர் செப்பேடுகள், பக். 91 152, தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு.
2. தஞ்சை மராட்டியர் கல்வெட்டுக்கள், ப. 185 இக்கல்வெட்டை மொழி பெயர்க்க உதவியவர், தஞ்சை சரசுவதி மகால் முன்னாள் மராத்திய மொழிப் பண்டிதர் டி. ஆர். பீமராவ் அவர்கள்.
3. தஞ்சை மராட்டியர் கல்வெட்டுக்கள், ப. 203.
4. நாகூர் தர்காவிற்கு நாயக்க மன்னர்கள், மராட்டிய மன்னர் களைத் தொடர்ந்து பலர் கொடை அளித்துள்ளனர். இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் நாகூர் பக்கிரிசாமி செட்டியார் குமாரன் கோவிந்தசாமி செட்டியார் நாகூர் தர்காவிற்குத் தளம் அமைத்ததாகவும், கூத்தநல்லூர் மகாதேவ அய்யர் வடக்கு மினாருக்குத் தங்கக் கலசம் வைத்ததாகவும் கல்வெட்டுக்கள் உள்ளன.

# தமிழகமும் கணபதி வழிபாடும்

**திரு. நடன. காசிநாதன்**
**இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை**

தமிழகத்தில் கணபதி வழிபாடு தொன்றுதொட்டு நிலவியதா, அல்லது ஒரு கால கட்டத்தில் வேறு இடத்திலிருந்து தமிழகத்துக்கு வந்ததா என்பது பற்றி இன்றும் கருத்து வேறுபாடு இருந்து வருகிறது ஆனால் பெரும்பாலான கருத்து இவ்வழிபாடு சாளுக்கிய நாட்டின் தலைநகரான வாதாபியிலிருந்து, கி பி. ஏழாம் நூற்றாண்டில் பல்லவப் பெருவேந்தன் நரசிம்மவர்மன் காலத்தில் அவரது தளபதியான பரஞ்சோதி என்னும் சிறுத்தொண்டரால் கணபதி உருவத்தைக் கொணர்ந்து தமிழகத்தில் தொடங்கப் பட்டது என்பதாகும்.

இக்கருத்தை, அண்மைக் காலங்களாகக் கிடைத்து வரும் தொல்பொருள் சான்றுகளால் மாற்றிக்கொள்ளவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது. இதற்கு முன்பாக, இந்தியாவின் வடபகுதியில் கணபதி பற்றிய, தொடக்கக் காலக் கருத்து என்ன, பின்பு நாளா வட்டத்தில் எக்கருத்து உருவானது என்பவற்றைப் பார்க்கலாம்.

தொடக்கத்தில், ரிக் வேத காலத்தில் கணங்களின் தலைவனாகத்தான் 'கணபதி' மதிக்கப்பட்டார். 'கணம்' என்பதைப் பழங்குடி மக்கள் என்ற பொருளில்தான் வேதகால மக்கள் கொண்டனர்.[1] "வேதகால மக்களும் கிட்டத்தட்ட அதே நிலையில் இருந்ததால் கணங்களைத் தங்கள் நண்பர் களாகவே பாவித்தனர்; கணபதியை அவர்களது தலைவராகவே கொண்டனர்; வேதகாலத்துக்கு அடுத்த கால கட்டத்தில் நிகழ்ந்தது போன்று, கணங்களை அவர்கள் வெறுக்கவில்லை" என்று தேவிபிரசாத் சட்டோபாத்யாயா கூறியுள்ளார்.[2] அலிஸ் கெட்டி என்பார், "கணபதி திராவிடர்களின் கடவுள் என்றும் சூரியனை வணங்கி வந்த பழங்குடியினர் கணபதியை வழிபட்டு வந்தனர் என்றும் சில அறிஞர்கள் கருதுகின்றனர்" என்று

குறிப்பிட்டுள்ளார்.[3] ஆனால் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டளவில் 'மானவ க்ருஹ்ய சூத்திரத்தில்' தீமைகளின் மொத்த உருவமாகக் கணபதி விவரிக்கப்பட்டுள்ளார்.[4]

மனுதர்மசாஸ்திரம், 'கணயாகம்' செய்பவர்களைக் கருமகாரிய விருந்திலிருந்து (இறந்தவரை அடக்கம் செய்தபின் உண்ணும் விருந்து) நீக்கி வைக்கப்படுதல் வேண்டும் என்று தெரிவிக்கிறது.[5] மேலும் கணபதி ஒதுக்கப்பட்டவர்களின் - அதாவது சூத்ரர்களின் கடவுள் என்று கூறுகிறது[6] சூத்ரர் என்போர் மனுதர்ம சாஸ்திரப் படி கிழிந்த ஆடைகளைத் தரித்து, கழிக்கப்பட்ட உணவுகளை உண்போர் ஆவர்.[7]

யக்ஞவல்க்யம், தீமைகளை ஏற்படுத்துவதற்காக, கணங்களின் தலைவனாக விநாயகர் ருத்ரனாலும், பிரம்மாவினாலும் நியமிக்கப் பட்டார் என்று கூறுகிறது.[8]

தீமை செய்வதற்காக நியமனம் செய்யப் பெற்றவர் தீமை களைக் களையும் கடவுளாகப் பின்னாளில் மதிக்கப்பட்டுப் போற்றப்படலானார். அக்கொள்கையே இற்றை நாளில் நிலவி வருகிறது.

கணங்கள் என்ற பழங்குடி மக்களின் தலைவனான கணபதி, வேதகால மக்களின் நண்பனாக மதிக்கப்பட்டு, கி. மு. ஐந்தாம் நூற்றாண்டளவில் 'தீமைகளின் மொத்த உருவம்' என்று வருணிக்கப் பட்டு, மனு காலத்தில் சூத்ரர்களின் கடவுளாகக் கொள்ளப்பட்டு, யக்ஞவல்க்யர் காலத்தில் தீமைகளை உண்டாக்குவதற்காக ருத்ரனாலும் பிரம்மாவாலும் நியமனம் செய்யப்பட்டவர் என்று கருதப்பட்டுள்ளார். அக்கடவுள் பின்னாளில் தீமைகளைக் களைபவ ராக வணங்கப்பட்டார்.

இந்நிலைகள் தமிழகத்தில் ஏற்பட்டனவா என்று பார்த்தால் தக்க சான்றுகள் யாதும் கிடைக்கவில்லை என்றே கூறலாம். ஆனால் கணபதி வழிபாடு மிகப்பழங்காலந்தொட்டே தொடங்கி யிருக்க வேண்டும் என்று ஊகிப்பதற்கு அண்மைக் காலங்களில் இலக்கிய மற்றும் தொல்லியல் சான்றுகள் கிடைத்துள்ளன.

முதலாவதாக சிவ ஆகமங்களைக் குறிப்பிடலாம். அனைத்து சிவாகமங்களும் கணபதி வழிபாட்டு முறையை விளக்குகின்றன.

கணபதி வழிபாடு தனிப்பட்டோர் வழிபாடாகவும், கூட்டு வழிபாடாகவும் விவரிக்கப்பட்டுள்ளது. ஆகமங்களின் காலம் புத்தர் காலத்துக்கு முன்பாக - அதாவது கி.மு. ஆறாம் நூற்றாண்டுக்கு முன்பாகக் கருதப்படுகிறது. மேலும் இவை தென்னிந்தியாவில்-குறிப்பாகத் தமிழகத்தில், சிவாச்சாரியர்களால் எழுதப்பட்டதாகக் கொள்ளப்படுகிறது.[9] ஆதலால் கணபதி வழிபாடு கி.மு. ஆறாம் நூற்றாண்டுக்கு முன்பாகவே தமிழகத்தில் நிலவியிருக்கவேண்டும் என்று அறிய முடிகிறது.

சிறந்த நாகரிகக் காலமாக விளங்கிய சங்க காலத்திலேயே, ஒரு பக்கம் மலை வாழ் மக்களாகிய படிங்குடியினரும் வாழ்ந்திருக்கிறார்கள். ஏனெனில் சங்ககாலப் புலவர்களில் பலர் பல்வகைக் குடிகளைச் சார்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். உதாரணமாகக் கடுவனிள மள்ளனார், களைதின் யானையார், எருமை வெளியனார், எழும்பன்றி நாகன் குமாரன், ஓதலாந்தையார் ஆகியோரைக் காட்டலாம்.[10] மேற்காணும் புலவர்கள் கடுவன் (குரங்கு), யானை, எருமை, பன்றி, ஆந்தை ஆகிய குடிகளைச் சார்ந்தவர்களாக ஊகிக்கமுடிகிறது. அத்தகைய பழங்குடிகள் இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும் வாழ்த்திருக்கின்றனர். அவ்வாறு வாழ்ந்த பழங்குடிகளுள் ஒரு குடியினர் 'யானையைத்' தம் குலச்சின்னமாகக் கொண்டிருத்தல் கூடும். மற்றொரு குடியினர் 'எலியைத்' தம் குலச்சின்னமாகப் பெற்றிருக்கலாம். 'மூஷிக' வமிசம் என்ற ஒரு குடியினர் தென்னிந்தியாவில் இருந்திருக்கின்றனர் என்பது மாபாரதத்தில் குறிப்பிடப்படுவதாக ஜயஸ்வால் கூறியுள்ளார்.[11]

மேலும் காரவேலனின் ஹாதிகும்ப கல்வெட்டும், காரவேலன் மூஷிகர்களைத் தோற்கடித்து, அவர்களது தலைநகரத்தைக் கைப்பற்றிக் கொண்டதாகக் கூறுகிறது.[12] சேரநாடு "வேழமுடைத்து மலைநாடு" என்று சிறப்பித்துக் கூறப்படுவதாகும். இப்பகுதியில் வேழம் (யானை) மிகுந்து காணப்படுவதால் இவ்வாறு கூறப்பட்டதாகப் பொதுவாகக் கருதப்படுகிறது. ஆனால் வேழத்தைக் குலச்சின்னமாகக்கொண்டவர்கள் இங்கு வாழ்ந்ததால் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்றும் கருதலாம். அத்தோடு 'மூஷிக நாடு' என்று ஒன்றும், கொல்லத்துக்கும் கன்னியாகுமரிக்கும் இடைப்பட்ட பகுதியில் இருந்தது என்பதும் தெரியவருகிறது.[13] மூஷிக என்று ஒரு கோத்திரமும் நகராலு என்பாருக்கு வழங்கிவந்திருக்கிறது.[14]

ஆதலால் யானையைத் தன் குலச் சின்னமாகக் கொண்டவர்கள் எலியைக் குலச் சின்னமாகக் கொண்டவர்களை வென்றிருப்பதையே இது காட்டுகிறது என்று கருதப்படுகிறது.[15]

யானையைக் குலச்சின்னமாகக் கொண்டவர்கள் தங்கள் தலைவனுக்கு யானை உருவ முடி சூட்டி மகிழ்ந்திருப்பர் அவர்களது தலைவன் இறந்த பிறகு அதே உருவில் தலைவனுக்கு உருவம் அமைத்து வழிபட்டிருப்பர். 'மூஷிக' உருவத்தைக் குலச் சின்னமாகப் பெற்றவர்களை வென்ற காரணத்தால் இவ்வெலியைத் தலைவனுடைய காலினடியில் கிடத்தி விட்டனர். இப்படித்தான் இந்தியாவில் கணபதி வழிபாடு தொடங்கப்பட்டிருத்தல் கூடும் ஆதலால்தான் இவ்வழிபாடு சூத்ரர்களால் கொள்ளப்பட்டது என்று கூறப்பட்டிருக்கிறது.

பழங்குடி மக்களிடையே நிலவிய இவ்வழிபாடு நாகரிகம் பெற்ற மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்குச் சில நூற்றாண்டுகளாகியிருக்கும் ஆதலால் சங்ககாலத்திலிருந்து தமிழகத்தில் கணபதி வழிபாடு செல்வாக்கு பெறத் தொடங்கி விட்டது எனலாம்.

இக்கருத்துக்குச் சான்றாகச் சங்ககாலத் தமிழிலக்கியமான புறநானூற்றுப் பாடல் ஒன்றைக் காட்டலாம்.

> 'நல்லவும் தீயவும் அல்ல; குவியிணர்ப்
> புல்லிலை எருக்கம் ஆயினும், உடையவை,
> கடவுள் பேணேம் என்னா; ஆங்கு,
> மடவர் மெல்லியர் செல்லினும்
> கடவன் பாரி கைவண்மையே''[16]

என்ற பாடலாகும் அது. கடவுள், தாழ்வாகக் கருதப்பெறும் எருக்கம் இலையைத் தந்து வழிபட்டாலும் எல்லா பக்தர்களையும் ஒன்றாகத் தான் கருதும்: வேறுபாடு காட்டாது என்பது இப்பாடலின் மையப்பொருள். இங்கு எருக்கு இலை குறிப்பிடப்படுவது கணபதி வழிபாட்டை நினைவுபடுத்துகிறது என்றும், எருக்கு மாலையைத் தான் கணபதிக்குச் சூட்டி மக்கள் வழிபடுவர் என்றும்; ஆதலால் சங்ககாலத்திலேயே கணபதி வழிபாடு இருந்தது என்பது இதன் மூலம் தெளிவுறும் என்றும் அருணாசலம் எழுதியுள்ளார்.[17] மேலும்

திருச்சி மாவட்டம் குளித்தலை வட்டம் திருக்காம்புலியூர், முசிறி வட்டத்திலுள்ள அலகரை ஆகிய இடங்களில் சென்னைப் பல்கலைக் கழகத் தொல்லியல் துறை கண்டுபிடித்துள்ள கணபதி மற்றும் அவரது வாகனமான எலிகளின் சுடுமண் உருவங்களைக் காட்டலாம்.[18] இவ்வுருவங்களின் காலம் கி.பி. 4-5-ஆம் நூற்றாண்டு என்று தொல்லியலாளர்களால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திலுள்ள பிள்ளையார் பட்டியில் காணப்பெறும் குடைவரைக் கோயிலில் ஒரு பழமையான கல்வெட்டும், கணபதியின் புடைப்புச் சிற்பமும் அருகருகே காணப்பெறுகின்றன. இக்கல்வெட்டு,

'எருகாட்டூரு
க்கோன் பெருந்தசன்'

என்று எழுதப்பட்டுள்ளது. இதன் காலத்தை ஐ. மகாதேவன் கி.பி. ஐந்து - ஆறாம் நூற்றாண்டெனக் கணித்துள்ளார்.[19] இக்கல்வெட்டு பொறிக்கப் பெற்ற காலத்திலேயேதான் அங்குள்ள கணபதியின் உருவமும் செதுக்கப் பெற்றிருத்தல் வேண்டும். ஆதலால் கி.பி. ஐந்து-ஆறாம் நூற்றாண்டிலேயே கணபதி வழிபாடு மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கு பெற்றுவிட்டது என்று கருதலாம். எருக்காட்டூர், சங்க காலத்திலிருந்தே நிலவி வரும் ஊர் என்பதை 'எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்'[20] என்ற சங்கப் புலவரின் பெயர் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

கி.பி. ஆறாம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தியதாகக் கருதப்படும் புடைப்புச் சிற்பத் தொகுதிகள் சிலவற்றில் கணபதி உருவம், பிரமன், சிவலிங்கம், பார்வதி, முருகன் ஆகிய உருவங்களோடும்; மற்றொன்றில் மூத்தோள் (சேட்டை) உருவத்துடனும் காணப்படுகிறது.[21] இவ்வளர்ச்சி, பழங்குடி மக்களின் (சூத்ரர்களின்) இறைவனாக இருந்த கணபதி நாகரிகம் பெற்ற மக்களின் இறைவனாக மாற்றம் பெற்ற காலமாகும். அதனால்தான் மும்மூர்த்திகளான பிரம்மன், சிவன், திருமால் ஆகியோரோடு கணபதி ஒருங்கே வைத்து பூசிக்கப்பட்டிருக்கிறார். இப்புடைப்புத் தொகுதிகளிலுள்ள கணபதி உருவத்துக்கும், பிள்ளையார்பட்டி கணபதி உருவத்துக்கும் மற்ற உருவங்களுக்கு உள்ளது போன்றே இரண்டு

கரங்கள்தான் காணப்படுகின்றன. மேலும் வலம்புரி விநாயகராகவே உள்ளனர். எனவே தமிழகத்தில் தொடக்கக் காலத்தில் கணபதி, தும்பிக்கையையும் சேர்த்து முக்கரத்துடனே வழிபடப்பட்டிருக்கிறார்.

செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் வல்லத்தில் மகேந்திர வர்மன் காலத்தியதாகக் கருதப்படும் குடைவரைக் கோயிலில், ஒரு சன்னதியின் முன்பாக உள்ள இரு தூண்களில் ஒன்றில் கணபதியின் உருவமும் மற்றொன்றில் சேட்டையின் சிற்பமும் செதுக்கப்பட்டிருக்கின்றன.[22]

விநாயகர் மும்மூர்த்திகளோடு ஒரு சேரக் கொண்டு வரப்பட்டு விட்டாலும்; சிறு தெய்வங்களோடு அவரைச் சேர்த்து வழிபடும் முறையும் தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது. சேட்டைத் தெய்வத்தோடு தொடக்கத்தில் இவர் வழிபடப்பட்டது போன்றே பின்னாளில் 'சப்த கன்னியர்' சிற்பங்களோடு கணபதியின் உருவம் வைத்து வழிபடப்பட்டிருக்கிறது. சென்னைக்கு அருகிலுள்ள குன்றத்தூரில்தான் தாய்மார் எழுவரின் மிகப் பழமையான சிற்பங்கள் காணப்படுகின்றன. அவற்றோடு கணபதியின் சிற்பமும் அங்கு உள்ளது.[23] இச்சிற்பங்கள் கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தையோ அல்லது ஏழாம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தையோ சார்ந்தவையாகும்.

சிவன், உமையோடு கணபதி சேர்க்கப்பட்ட பின்னர் சிவனின் மகனாக அப்பர் பெருமானால் கீழ்வரும் பாடல் வரிகளில்,

"தக்கனது வேள்விகெடச் சாடி னானைத்
தலைகலனாப் பலியேற்ற தலைவன் தன்னைக்
கொக்கரை கச்சரிவீணைப் பாணியானைக்
கோணாகம் பூணாகக் கொண்டான் தன்னை
அக்கினொடும் என்பணிந்த அழகன் தன்னை
ஆறுமுகனோடு ஆனைமுகற் கப்பன் தன்னை
நக்கனைவக் கரையானை நல்லாற் றானை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே"

என்று பேசப்பட்டுள்ளார்.[24] அப்பரது காலம் கி.பி. 580 முதல் 660 முடிய என்று வரையறுத்துள்ளனர்.

முத்தமிழ் ஞானசம்பந்தரும்,

"சந்தநன் மலரணி தாழ்சடையன்
**தந்தம தத்தவன் தாதையோதான்"**

என்று பாடியுள்ளார்.[25]

எனவே சிறுத்தொண்டன் என்ற பரஞ்சோதி காலத்துக்கு முன்பாகவே அப்பராலும் ஞானசம்பந்தராலும் கணபதி குறிக்கப் பட்டுள்ளமை இதன் மூலம் தெரியவரும்

சேக்கிழார் திருச்செங்காட்டாங்குடியில் இருந்த கோயிலைப் பற்றிக் கீழ் வரும் பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்.[26]

"மன்னவனை விடைகொண்டு தம்பதியில் வந்தடைந்து
மன்னுபுகழ்ப் பரஞ்சோதியார் தாமும் பனிமதிவாழ்
சென்னியரைக் கணபதீச்சரத் திறைஞ்சித் திருத்தொண்டு
முன்னைநிலை மையில் வழுவா முறையன்பிற் செய்கின்றார்"
(11-ஆம் பாடல்)

"கண்ணுதலார் கணபதீச்சரத்தின்கட் கருத்தமர
உண்ணிறை யன்பினிற் பணிசெய் தொழுகுவார் வழுவின்றி
எண்ணில் பெருஞ்சீரடியா ரிடைவிடா தமுதுசெய
நண்ணிய பேருவகையுட னயந்துறையு நாளின்கண்"
(15-ஆம் பாடல்)

"கண்நுதலிற் காட்டாதார் கணபதீச்சரத் தின்கண்
வண்ணமல ராத்தியின் கீழிருக்கின்றோ மற்றவர்தாம்
நண்ணினா னாமிருந்த பரிசுரைப்பீ ரென்றருளி
அண்ணலார் திருவாத்தி யணைந்தருளி யமர்ந்திருந்தார்"
(41-ஆம் பாடல்)

"கடிசேர் திருவாத் தியினிழற்கீ ழிருந்தார் கணபதீச்சரத்து"
(43-ஆம் பாடல்)

மேற்காணும் பாடல்களில் ஒரு இடத்திலும் சிறுத்தொண்டர் தான் முதன்முதலில் கணபதிக்குக் கோயில் எடுப்பித்தார் என்று கூறப்படவில்லை. ஏனெனில் சிறுத் தொண்டருக்கு முன்பாகவே திருச்செங்காட்டாங்குடியில் கணபதியால் வழிபடப்பட்ட 'ஈச்சுரம்' அங்கு இருந்ததாலேயாகும்.

நரசிம்மபல்லவ மன்னனின் வெற்றிகளைப் பட்டியலிட்டுத் தரும் அவன் காலத்திய செப்பேடுகளோ மற்றும் கல்வெட்டுக்களோ பரஞ்சோதி வாதாபியிலிருந்து கணபதி உருவத்தைக் கொண்டு வந்ததாக யாங்கணும் தெரிவிக்கவில்லை. சிறுத்தொண்ட நாயனார் புராணமும்,

'மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித்
தொன்னகரம் துகளாகத் துளை நெடுங்கை வரையுகைத்துப்
பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும்
இன்னஎண் ணிலகவர்ந்தே இகலரசன் முன்கொணர்ந்தார்.

(5-ஆம் பாடல்)

என்றுதான் கூறுகிறதேயொழிய கணபதி உருவத்தைக் கொண்டு வந்ததாகக் குறிப்பிடவில்லை. மன்னர்கள் வெற்றிப் பரிசாகக் கலைப் பொருட்களைப் பிற பகுதியிலிருந்து கொண்டு வந்திருக்கின்றார்கள். முதலாம் இராஜேந்திரன், விஜய இராஜேந்திரன் ஆகியோர் காலங்களில் வெற்றிச் சின்னங்களாகப் பிற பகுதியிலிருந்து சிற்பங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன.[27] ஆனால் நரசிம்மன் காலத்தில் வாதாபியிலிருந்து கணபதியின் உருவம் கொண்டு வரப்பட்டதாகச் சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை. அப்படிக் கொண்டு வரப்பட்டிருக்கலாம் என்று வரலாற்று வித்தகர் சதாசிவ பண்டாரத்தார் ஊகித்திருக்கிறார். அவ்வளவே. மேலும் சிறுத்தொண்டர் திருச்செங்காட்டாங்குடியில் முதன்முதலில் கணபதிக்குக் கோயில் எடுப்பித்திருந்தால், பல்லவ மன்னனாலும் பூசலார் நாயனாராலும் சிவபெருமானுக்குக் கோயில் எடுப்பித்த செய்தியைக் கூறும் சேக்கிழார் இச்செய்தியைக் கூறாமல் விட்டிருக்க மாட்டார். ஆதலால் கணபதி வழிபாடு தமிழகத்தில் சங்க காலத்திலிருந்தே தொடர்ந்து நிலவி வருகிறது என்று கொள்வதே சரியாகத் தோன்றுகிறது.

---

1. SED 343
2. Lokayata, p. 146 (Pub. 1978)
3. Tamil Culture Vol. III, No. 2, p. 170.
4. Manava Grihya Sutra, ii 14
5. Manu Dharma Sastra, iii 164
6. Manu, V Q 1931-2. 4715
7. Manu, X 125

8. Yajnavalkya, i. 271 ff. Free rendering
9. M. Arunachalam, S.I.S. Vol. II, p. 32
10. நற்றிணை, 150; புறம், 204; அகம், 72 138, 240; குறுந்தொகை, 12, 21, 329
11. J. BORS iii 442
12. Ibid, iii 462
13. E. Thurston, Castes and Tribes of Southern India, Vol. V, p. 119 (1909)
14. T.A.S. Vol. II, No. 106; Tamil Lexicon Vol. VI, p. 3334, published by University of Madras (1982); நா. கதிரைவேற் பிள்ளை, தமிழ் மொழிஅகராதி, (1994), பக்கம் கசஅச
15. Debiprasad Chattopadhyaya, Lokayata, p. 144
16. புறம் : 106
17. M. Arunachalam, S.I.S. Vol. II, p. 45
18. T. V. Mahalingam, Report on the Excavations in the Lower Kavery Valley, 1970, pp. 59, 105.
19. கல்வெட்டுக் கருத்தரங்கு "Corpus of the Tamil Brahmi Inscriptions, p. 68
20. அகம், 149, 319,357; புறம், 397
21. Natana. Kasinathan, Art Panorama of Tamils, "Exquisite Panel Sculptures of Tamilnadu", pp. 25-28
22. M. Arunachalam, S.I.S. Vol. II, "Purananuru and a Rethinking on Ganapathi Worship in Tamilnadu", p 81; இச்சிற்பங்கள் மகேந்திரவர்மன் காலத்தைவிடப் பிற்பட்டதாக இருக்கலாம் என்று கே. ஆர். சீனுவாசன் கருதியுள்ளார். Cave temples of Pallavas, (1964) p 64
23. நடன. காசிநாதன், கல்வெட்டு (காலாண்டு இதழ்) எண். 14
24. மூவர் தேவாரம் : தலமுறை (அடங்கல்முறை) திருநாரையூர், பக்கம் 289 (காஞ்சி மடம், கும்பகோணம் வெளியீடு, 1988)
25. Ibid, திருவிராமனதீச்சரம், பக்கம் 819
26. Ibid, திருச்செங்காட்டாங்குடி, பக்கம் 825
27. தி. வை. சதாசிவ பண்டாரத்தார், இலக்கியங்களும் கல்வெட்டுக்களும், டக்கம் 96, (மணிவாசகர் நூலகம் வெளியீடு 1977)

# அரியலூர் மழவராயர்கள்

**ஆர். ராமசேஷன்**, எம்.ஏ.,
துணைப்பேராசிரியர், அரியலூர்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அரிய பல வரலாற்று உண்மைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குவது அரியலூர் என்னும் சிற்றூர். அறிய வேண்டிய பல அரிய செய்திகளையும் அது தாங்கி நிற்கின்றது. ஆகவே அரியலூர் என்ற பெயர்க்காரணமும் அதற்குப் பொருத்தமேயாம்.

நிலப்பொதியியல் ஆய்வின்படி சுமார் 12 கோடி ஆண்டுகட்கு முன் அரியலூர்ப்பகுதி கடலாகவே இருந்தது. மத்திய தரைக்கடலின் தொடர்ச்சியாக நர்மதைப் பள்ளத்தாக்கு வழியே, கிழக்குக் கரையோரமாக அரியலூர்ப் பகுதியும் கடலாக விளங்கியது காலப் போக்கில் கடலை வெற்றிகொண்டு நிலப்பகுதி ஆயிற்று இன்னும் கடல்வாழ் பிராணிகளின் எலும்புகள், பாறைகளாக அமைந்து புவியியல் ஆய்வாளர்களுக்கு ஓர் ஒப்பற்ற ஆய்வுக்கூடமாக அரியலூர் திகழ்கின்றது.

மனித வரலாறு ஏற்பட்ட பின்னரும் அரியலூர் தனக்கென்று ஒரு சிறப்பிடத்தைப் பெற்றுவிட்டது. பண்டைக்காலத்தில் இவ்வூர் "அரிசில்" என்ற பெயர் கொண்டிருந்ததெனச் சிலர் கூறுவர். சங்கப்புலவர்களுள் ஒருவரான அரிசில் கிழார் என்பவருடைய ஊராகிய அரிசிலென்பது இவ்வூர் என்று சிலர் கூறுவதுண்டு" என்று தமிழ்த் தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் தனது "நல்லூரைக் கோவை" என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். அரியலூர் என்றும் அரியில் என்றும் இவ்வூர் வழங்கப்பட்டு வந்தது.

இயற்கை அமைப்பில் அரியலூர் குறிஞ்சி நிலவகையைச் சார்ந்தது. இவ்வூருக்குக் 'குன்றை" என்ற பெயரும் நிலவி வந்துள்ளது இப்பகுதியைக் குன்ற வள நாடு என்றும் அழைத்தனர். அரியலூருக்கு அருகில் உள்ள குன்னம் (குன்றம்) பெரிய

திருக்கோணம் (பெரிய திருக்குன்றம்), குறிஞ்சான்குளமும் இக்கருத்தை வலியுறுத்துவன.

தமிழ்நாட்டில் தொன்று தொட்டு வாழ்ந்து வரும் பழங்குடிகளில் ஒன்று மழவர் குடியாகும். இம்மழவர்கள் சிறந்த வீரர்களாய் விளங்கினர். சங்க நூல்களிலும், பண்டைய சாசனங்களிலும் மழவர்களைப் பற்றிய செய்திகள் பல காணப்படுகின்றன. மழவர்கள் வாழ்ந்த நாடு மழவர் நாடென விளங்கிப் பின் மழநாடாயிற்று. இம்மழநாடு, மேல் மழநாடெனவும், கீழ் மழநாடெனவும் இரண்டாகப் பிரிக்கப் பெற்றிருந்தது. அரியலூர் கீழ்மழநாட்டைச் சேர்ந்தது.

விஜயநகரப் பேரரசில் கஜபதி வம்சத்தைச் சேர்ந்த திம்மராயர் ஆண்டு வந்த காலத்தில் — அவரது ஆதரவு பெற்ற இராமநயினார், பூமி நயினார் என்ற இரு சகோதரர்கள் அரியலூரில் தம் ஆட்சியை நிறுவினர் என்பர். காடுகளை அழித்து இப்பகுதியை அவர்கள் நாடாக்கினர் என்று கூறப்படுவதால் அதுவரையில் இப்பகுதி அடர்ந்த காடாகவே விளங்கிக் கொடிய விலங்குகட்கும், தீயவர்களுக்கும் பாசறையாக இருந்ததென்பது புலப்படும். திம்மராயருக்குப் பின் வந்த நரசிம்மராயர், இச்சகோதரர்களை அங்கீகரித்து ஊட்டத்தூருக்கும், சிதம்பரத்திற்கும் இடையேயுள்ள நிலப்பகுதிக்கு இராம நயினாரை அதிபதியாக்கி, மதுரையை ஆண்ட விசுவநாதநாயக்கரின் (1529-64) கீழ் சிற்றரசாக இருக்கச் செய்தார்.

அரியலூரில் கோயில் கொண்டுள்ள ஒப்பிலாத அம்மன் என்ற பெண் தெய்வத்தின் அருளால் இராயநயினார் ஏற்படுத்திய இப்பரம்பரை குன்றை ஒப்பிலாத மழவராயர் என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டனர். அரியலூர் சிற்றரசர்களைப் பற்றிய செய்திகளை மெக்கன்சி குறிப்புகளில் காணலாம். இராமநயினார் மரபில் வந்த எட்டாவது அரசர் ரெங்கப்ப ஒப்பிலாத மழவராயர், கி.பி. 1651-ல் மதுரை மீது முஸ்லீம் படையெடுப்பு நேர்ந்தபோது மதுரையை ஆண்ட வீரப்ப நாயக்கருக்குத் துணை நின்று வெற்றி பெற உதவினார். 16-ஆவது பட்டத்தில் விளங்கிய இராம விஜய ஒப்பிலாத மழவராயர் சிறந்த வீரராகத் திகழ்ந்தவர்.

தென்னிந்தியாவில் ஆங்கிலேயருக்கும், பிரெஞ்சுக்காரருக்கும் நிகழ்ந்த போர்களில் அரியலூர் மன்னர் முக்கியப் பங்கேதும் கொள்ளவில்லை. எனினும் ஆங்கிலேயரை ஆதரித்த துறையூர்

அரசருக்கு அரியலூர் புகலிடம் கொடுத்தது என்ற காரணத்தால் பிரெஞ்சுப்படை கி.பி. 1755-ல் அரியலூரை முற்றுகையிட்டது. 1765-ல் கர்நாடக நவாப் அரியலூரை வெற்றிகொண்டார். அரண்மனைகள் இடிபட்டன. ஆயுதச் சாலையில் அரசகுடும்பத்தினர் குடியேற நேர்ந்தது. இன்னும் அக்குடும்பம் அதிலேதான் வாழ்கின்றது. அரியலூர் அரசர் அப்போது தஞ்சையிலும் பின்பு மைசூர் மன்னர் ஐதர் அலியிடமும் சென்று தஞ்சம் புகுந்தார். 1780-ல் ஐதர் அலி, அரியலூரை மீட்டு அதன் அரசரிடமே ஒப்படைத்தார். 1783-ல் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியினர் அரியலூர் அரசரிடம் வரி வசூலிக்கும் உரிமையை வழங்கி அவர்களது முறைப்படி அரியலூரை ஜமீனாக்கிவிட்டனர். அடுத்த 10 ஆண்டுகள் அரியலூர் ஜமீனுக்குச் சோதனைக்காலமாக இருந்தது. ஆனால் 1816-ல் அரியலூர் ஜமீன்தார் பெயரளவுக்கு பெஷ்காஷ் செலுத்தி அவர்களே நிர்வாகம் செய்து கொள்ள முடிவு செய்யப்பட்டது. 1817-ல் ஆங்கில அரசு, ஜமீன்தாருக்குச் "சன்னது" வழங்கியது. அப்போது 57 கிராமங்கள் அரியலூருக்குச் சொந்தமாயிருந்தன. பின்பு படிப்படியே குறுகி, 1907-ல் 7 கிராமங்கள் மட்டுமே அதற்கு உரிமையாயிருந்தன என்று ஹெபிங்வே திருச்சிராப்பள்ளி கெஸட்டியரில் குறிப்பிடுகின்றார். 1951-ல் அரசு நஷ்ட ஈடு வழங்கி ஜமீனையும் கலைத்துவிட்டது.

ஏறத்தாழ நான்கு நூற்றாண்டுகள் விளங்கிய அரியலூர் அரசாட்சி தமிழக வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ளமைக்குக் காரணம், இவ்வரசர்கள் கலைகளையும் கல்வியையும் போற்றி ஆதரித்தமையேயாகும். அரியலூரில் இன்றும் எழில் பெற விளங்கும் கோதண்டராமசுவாமி கோயில் வனவாசத்தில் இராமர் நின்ற கோலத்தைக் காட்டும். இங்கே அமைந்துள்ள தசாவதாரச் சிற்பங்களைத் தமிழகத்தில் வேறெங்கும் காணமுடியாது என்று துணிந்து கூறலாம். அவ்வளவு அகலமான மண்டபத்தையும் காண்பது அரிது. இவை அரியலூர் அரசின் கலைப்பணிக்குச் சான்று கூறி நிற்கின்றன.

அரியலூர் அரசர்கள் கொடைத்திறம் கூறும் சான்றுகளாக அரியலூர் கிருஷ்ணன் கோயில், திருப்பழுவூர்க் கோயில், உடையார் பாளையம், திருமழபாடி ஆகிய இடங்களில் காணப்பெறும் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் அமைந்துள்ளன. அரியலூர்

அரசில் பணியாற்றிய மீனாட்சி தீட்சிதர் என்பவர் அமைத்த ஆயிரக் கால் மண்டபம் இன்றும் ஒரு சில தூண்களுடன் சின்னமாகக் காட்சி நல்குகிறது.

**செவிவழிச் செய்திகளில் சில சுவையானவை**

(1) கர்னாடக நவாப் ஒரு பக்கிரிக்கு யானை ஒன்றைக் கொடுத்திருந்தார். பிறகு பக்கிரி மீது வெறுப்புற்று, யானையைத் திரும்ப எடுத்துக்கொண்டு, எவரும் அப்பக்கிரிக்கு யானை கொடுக்கக் கூடாது என்று சிற்றரசர்களுக்கு ஆணை பிறப்பித்திருந்தார். ஞானமுள்ள அப்பக்கிரியைப் பாராட்டி அரியலூர் அரசர் அவருக்கு யானையொன்றைப் பரிசளித்துவிட்டார். நவாப் படைகள் அரியலூரை முற்றுகையிட்டன. ஆனால் கோதண்டராமசுவாமி அருளால் நவாப் படைகளைத் தோற்கடித்து அரியலூர் அரசர் வெற்றி கொண்டார். இதனால் அரியலூர் அரசருக்கு 'பக்கிரிக்கு யானை கொடுத்தவர் என்ற ஒரு விருது உண்டாயிற்று.

(2) ஆந்திரத்தைச சார்ந்த சிற்றரசரிடம் அதிகாரியாயிருந்த ஐயப்ப நாயக்கர் அரியலூர் மீது படையெடுத்தார். அரியலூரின் தென்பால் பாசறை அமைத்துக் கொண்டு, ஒரு குளமும் வெட்டு வித்தார். அது ஐயப்பன்நாயக்கன் ஏரி என்று இன்றும் விளங்கு கின்றது. அரியலூர்ப் படைவீரன் ஒருவனுக்கு நீர்வேட்கை ஏற்படத் தன் குதிரையை விரைந்து செலுத்தினான். குதிரையின் விரைவு கண்டஞ்சி அருகே ஓர் உலர்ந்த பனைமரங்கண்டு அதனைப் பற்றிக் கொண்டான். ஆனால் குதிரையின் வேகத்தில் அப்பனை மரம் அவன் கையோடு வந்துவிட்டது. பனைமரத்துடன் வரும் அவ்வீரனைக் கண்டு, ஐயப்ப நாயக்கரின் படைகள் ஓட்டம்பிடித்தன. அரியலூர் வெற்றி பெற்றது.

(3) ஒரு சமயம் அரியலூர் அரசர் மீது பகையரசர் ஒருவர் படையெடுத்தார். அரியலூர் மழவராயர் படை அளவில் சிறியது தோல்வியும், நாடிழப்பும் ஏற்படுமோ என்று அரசர் மனங் கவன்றார். இருப்பினும் படையுடன் எதிரியைத் தாக்கச்சென்றார். வழியில் ஒரு விநாயகர் கோயில், அங்கிருந்த பிள்ளையாரை உள்ளமுருகி வணங்கிச் சென்றார். திருவருளால் அரியலூர் அரசருக்கு வெற்றி கிட்டியது. தம் வெற்றிக்குக் காரணம் பிள்ளையார் திருவருளே என்று எண்ணிய அரசர் அப்பிள்ளை

யாருக்கு "அரசு நிலையிட்ட பிள்ளையார் அல்லது அரசுநட்ட பிள்ளையார்" என்று அன்று முதல் பெயர்சூட்டி, அக்கோயிலை அழகாக எடுப்பித்து அதனருகே அரசு நட்டான் ஏரி என்ற ஒரு ஏரியையும் வெட்டுவித்தார். அக்கோயிலும் ஏரியும் அப்பெயர் களுடன் இன்றும் விளங்குகின்றன.

அரியலூர் மழவராயர்கள் அருங்கலை வினோதர்களாகக் கல்வியைப் போற்றிப் புலவர்களைப் புரந்த பல செய்திகளைப் பல தனிப்பாடல்கள் மூலமாகவும் நூல்கள் வாயிலாகவும் அறிகிறோம். கி. பி. 1902-ல் மஹாவித்வான் கா. இராமசுவாமி நாயுடு அவர்களது உரையுடன் வெளியிடப்பெற்ற தனிப்பாடற் றிரட்டில் அரியலூர் மழவராயர் மேல் புலவர்கள் பாடிய பாடல்கள் அமைந்துள்ளன. அரியலூர் அரசவை வடமொழி, தெலுங்கு, தமிழ், சங்கீதம் ஆகிய துறைகளில் சிறந்த புலவர்களைப் பேணி ஆதரித்தது. அரசவையில் பன்னிரு புலவர்கள் புகழ் பெற்றிருந் தனர். மழவராயர்களும் புலவர்களாகத் திகழ்ந்தனர்.

கிருஷ்ணைய ஒப்பிலாத மழவராயர், புலவர்களைப் போற்று வதில் தமிழ்நாடு முழுதும் புகழ் பெற்றிருந்தார். அந்தகக் கவி வீரார்கவ முதலியார் என்ற பெரும்புலவரைத் தமிழறிஞர்கள் அறிவர். அக்கவிஞரின் கவிவெள்ளத்தில் மூழ்கி இன்புற்ற மழவ ராயர் அவரை அரியலூரில் தங்கியிருக்க வசதி செய்து கொடுத்து, கணக்கற்ற பரிசுகளை வழங்கி மகிழ்ந்தார். மழவராயரின் கொடைத்திறனைப் பாராட்டி அந்தகக் கவியும்,

"சேய செங்குன்றைவரும் ஒப்பிலாதிக்குச் செங்கமலத்
தூய செங்கண்ணன் இணையொப்பனோ தண்துழாயணிந்த
மாயனளக்கும் படிமூன்று கிருஷ்ணைய மாமழவ
ராயனளக்கும் படி ஒரு நாளைக்(கு) இலக்கமுண்டே."

என்று பாடினார். கிருஷ்ணைய ஒப்பிலாத மழவராயருடைய மைந்தர் குமார ஒப்பிலாத மழவராயர். சங்கீத விற்பன்னர். அவரது இசைப்புலமையைப் பாராட்டி ஒப்பிலாத மழவராயர்.

"வாழொப்பிலாதவன் சேய் ஒப்பிலாதமழவ திரை
ஆழிக்கடல் விட்டு நீ பாடுங்காலத்தரி செலுங்கால்
நீழற்கவுத்துவ நீத்துச் செல்வான் அந்த நீண்மணிதான்
காழொப்பினு நின்னிசை கேட்குங்காற் கரைந்தேகுமென்றே"

என்று அந்தகக் கவி பாடினர்.

விஜயரங்க ஒப்பிலாத மழவராயர் அவையில் கடல் இருவாட்சிப் புலவர் என்பவர் "திருக்கைவளம்" என்ற நூலை இயற்றி அரங்கேற்றினார். அந்நூல் 1955ல் சென்னை வன்னிகுலமித்திரன் ஆசிரியர் ஆ. சுப்பிரமணிய நாயகர் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது. அரியலூர் மழவராயர்களின் கொடைவளம் அதில் புகழப்படுகின்றதோடு, அரசர் பலரின் ஈகைத்திறமும் அதில் இடம் பெற்றுள்ளன. அந்நூலில்

"ஆத்துறந்துங் கோல்துயில்வான் அரியென்ற பாலனுக்கு
மாத்துயரப் பொற்றேங்காய் வழங்குங்கை"

என்ற பகுதியில் மழவராயரின் ஒரு கொடைத்திறம் புகழப்படுகின்றது. மழவராயர் அவையில் பன்னிரு புலவர் இருந்தனர், அவர்களுள் ஒருவர் இறந்துவிட்டார். விசயதசமி வந்தது. பன்னிரு புலவருக்கும் பன்னிரு பொன்தேங்காய்கள் பரிசளிக்கத் தயாராயிருந்தன. வழங்கும் நேரத்தில் இறந்த புலவருடைய மைந்தன் அங்கே வந்திருப்பதை மழவராயர் கண்டு, இம்மைந்தனுக்குப் பொன்தேங்காய் வழங்குவதோ என்று மயங்கினார். புலவர்களும் இச்சிறுவன் பரிசுபெறத் தகுதியுடையனோ என்று ஏளனம் செய்து 'சிறுவனே' பரந்தாமன் பள்ளி கொள்ளும் இடம் எது என்று அறிவாயோ?" என வினவினர். உடனே அச்சிறுவன்,

பாலினும் இன்சொல், குயிலினும் மென்மொழிப்பாவை நல்லாள்
மேலினும் காமன் சரம் தைக்குமோ? வடவேங்கடத்து
ஆலினும், வேலை நடுவினும், பாம்பினும் ஆத்துறத்தும்
கோலினும் பள்ளி கொள்வாய்! மழவா! பள்ளி கொண்டவனே!

என்று விஷ்ணு அம்சமாகவே மழவராயரை வைத்து, நற்றாய் இரங்கற்றுறையில் இப்பாடலைப் பாட, மன்னர் வியந்தார்; புலவர் புல்லரிப்படைந்தனர்; பொற்றேங்காயைச் சிறுவன் பெற்றுக் கொண்டான்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

---

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் அச்சகத்தில் அச்சிட்டு
இத்துறை இயக்குநர். திரு. நடன. காசிநாதன் அவர்கள் சார்பாக
திரு. மா. சந்திரமூர்த்தி, பதிவு அலுவலரால்
வெளியிடப் பெற்றது.